**கவனிக்க.-** *2018.10.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2093 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2093 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 196 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

195-B81457-353 (2018/10)

# நானாவித அறிவித்தல்கள்

## 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சர்வதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*விஜேபால ஹெட்டி ஆராச்சி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*இச்சட்டமூலத்தின் நோக்கம் "சர்வதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தித் தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்)" சட்டத்தின் தலைப்புப் பெயருக்குப் பதிலாக "சர்வதேச சிங்கக் களரிகள் மாவட்டம் 306ஏ 1, மாவட்டம் 306 ஏ 2 தேசிய அபிவிருத்தி தாபன நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்)" என்ற பெயரை திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்துவதாகும்.*

*விஜேபால ஹெட்டி ஆராச்சி,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*10-270*

---

## ஸுபைர் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*ரோஹினி குமாரி விஜேரத்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "ஸுபைர் மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-*

*(1) வறிய மக்களுக்கு வாழிடங்களை வழங்குதல்;*
*(2) சமயம் சார்பான நிலையங்களின் அபிவிருத்திக்கு உதவி வழங்கல்;*
*(3) வேலையற்றவர்களுக்கென சுயதொழில் வாய்ப்புகளை ஏற்பாடு செய்தல்;*

*பிறவும்.*

*ரோஹினி குமாரி விஜேரத்ன,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*10-271*

---

## குளோபல் பிஸ் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*ஞானமுத்து சிவநேசன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "குளோபல் பிஸ் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-*

*(அ) உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் பல்லின சமூகங்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;*
*(ஆ) சிறுவர், இளைஞர் மற்றும் முதியோரின் பொருட்டு கல்வி ரீதியானதும் தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்திப் பயிற்சி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி அத்துடன் கல்வி ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஊக்குவித்தல்;*
*(இ) இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சமுதாய ரீதியான பிணக்குகள் காரணமாக இடம்பெயர்ந்த சமூகத்தினரை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும்;*

*பிறவும்.*

*ஞானமுத்து ஸ்ரீநேசன்,*
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*மட்டக்களப்பு மாவட்டம்.*

*10-345*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.